திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளிக்கும்போது மாவட்டக் கலெக்டர் தலைமையிலே எடுக்கப்பட்ட முடிவுகளைச் பற்றிச் சொன்னார்கள். ஆனால் இந்த முடிவுகளையெல்லாம் மீறி, சிவகாசியிலுள்ள தொழிற்சாலைகளில் சிறுவர்களும், சிறுமியர்களும், இன்னமும் அவர்களை வேலை வாங்கக்கூடிய ஒரு நிலைமை இருப்பதைத் தடுப்பதற்கு, கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் கடுமையான நடவடிக்கைகள், பிராசிக்குசன் எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மனதில் வைத்து, தீவிரமான நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 727—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நாகர்கோவிலில் பாதாள சாக்கடை திட்டம் என்ன நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): ரூ. 930.00 இலட்சங்கள் அமைப்புச் செலவிலும் ரூ. 32.50 இலட்சங்கள் வருடாந்திர பராமரிப்புச் செலவிலும் நாகர்கோவிலுக்கு ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்தது. ஆனால் அந்நகராட்சியின் நிதி நிலைமை பற்றாக்குறை காரணமாக தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பேஸ்டு பிராகிராம் என்ற அடிப்படையிலே இதை செய்யலாம் என்று மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்தில், டி. டி. சி, கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அத்தகைய தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா? அப்படி வரவில்லையென்றால் அந்த அதிகாரிகளிடம் அரசு அதற்கான காரணத்தைக் கேட்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட உடனேயே அவைகள் அரசுக்கு உடனே வந்துவிடாது.

It will be circulated through various Departments. அப்படி வரும் போது, அரசு பரிசீலனை செய்து சாதகமான முடிவு எடுப்பதற்கு முயற்சி எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே தீர்மானம் அரசுக்கு வந்து எவ்வளவு காலத்தில் இந்தத் திட்டம் செயலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவது என்பது, டிபாட்மென்டுக்கு வந்து. செயலாளரிடம் இருந்து என்னிடம் வந்து உடனே கூட முடிவு எடுத்துவிடுவோம். அதைத்தான் எப்போதும் செய்துவருகிறேன் அதேபோல் நாகர்கோவில் விஷயத்திலும் முடிவு எடுப்போம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாதாள சாக்கடைத் திட்டம் நகராட்சிகள் மட்ட அளவில் அமுல்படுத்தப்படுகின்றன. பேரூராட்சிகளிலும் அமுல்படுத்துவதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நகராட்சிக்கே முடியவில்லை. அப்புறம் பேரூராட்சிக்கு எங்கே வருவது.

பாக்கம்பாடி அணை சீரமைப்புத் திட்டம்,

* வினா எண். 728—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட வெள்ளாற்றில் பாக்கம்பாடி அணை சீரமைப்புத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) அதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) இது தலைமைப் பொறியாளரின் முதல் நிலை ஆய்வில் உள்ளது.

(ஆ) மதிப்பீடு விபரங்கள் ஆய்வு முடிந்த பின்னர் தான் கிடைக்கும்.

(இ) இத்திட்டத்தின் மூலம் 2,304 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. ஏ. தங்கராசு: தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இந்த பாக்கம்பாடி அணைத் திட்டத்தினால் 2,300 ஏக்கர் பாசனம் பெற இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு நல்ல திட்டம். அந்தப் பகுதி வறட்சியான பகுதி. இந்தத் திட்டத்திற்கு என்ன மதிப்பீடு என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS